# வழிகாட்டி

# நவீன அடிமைத்தனத்துக்கான குழுவிற்குச் சமர்ப்பித்தல்

**நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றத்தின் நவீன அடிமைத்தனத்துக்கான குழு, நவீன அடிமைத்தன அனுபவமுள்ள மக்களிடமிருந்து கேட்க விரும்புகிறது.**

## நவீன அடிமைத்தனம் என்றால் என்ன?

'நவீன அடிமைத்தனம்' என்பது ஒரு தனிநபரின் சுதந்திரத்தைக் குறைத்து மதிப்பிடும் தீவிர சட்டத்திற்குப் புறம்பான நடைமுறைகளை விவரிக்கிறது, மேலும் அவை மற்றொரு தனிநபர் அல்லது வணிகத்தின் தனிப்பட்ட அல்லது வணிக ஆதாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

அச்சுறுத்தல்கள், வன்முறை, வற்புறுத்தல் அல்லது ஏமாற்றுதல் போன்ற காரணங்களால் தனிநபர்கள் இந்த சூழ்நிலைகளை மறுக்கவோ அல்லது விட்டுவிலகவோ முடியாது. சுரண்டல் என்பது, நிதிசார்பு மற்றும் பாலியல்சார்பு உட்பட பல வடிவங்களை எடுக்கலாம்.

## குழுக்கள் பற்றி

நியூ சவுத் வேல்ஸ் பாராளுமன்றம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, சட்டங்களை உருவாக்குகிறது மற்றும் நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்தைப் பொறுப்பேற்க வைக்கிறது. இந்தச் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதில் உதவ, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா உறுப்பினர்களைக் கொண்ட **நவீன அடிமைத்தனத்துக்கான குழு** உட்பட பல குழுக்கள் நாடாளுமன்றத்தில் உள்ளன.

இந்தக் குழுக்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை விரிவாக ஆராய்ந்து, கொள்கைகள், சட்டங்கள் அல்லது அரசாங்கச் சேவைகளில் மாற்றங்கள் உட்பட நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்கும் விசாரணைகளை மேற்கொள்கின்றன.

***நவீன அடிமைத்தனத்துக்கான குழுவானது தனிப்பட்ட வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கையை விசாரிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ முடியாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.***

## நான் எப்படிச் சமர்ப்பிப்பது?

நவீன அடிமைத்தனத்துக்கான குழுவுடன் உங்கள் அனுபவத்தைப் பகிர்வது என்பது, நவீன அடிமைத்தன அபாயங்களை நிவர்த்தி செய்யவும், மற்றும் நியூ சவுத் வேல்ஸில் சுரண்டல் நடைமுறைகளை எதிர்த்துப் போராடுவதற்கும் சாத்தியமுள்ள சீர்திருத்தங்கள் பற்றிய குழுவின் பரிந்துரைகளைத் தெரிவிக்க உதவும்.

நவீன அடிமைத்தனத்துக்கான குழுவின் இணையதளம் வழியாக ஒரு குறிப்பிட்ட விசாரணைக்கு நீங்கள் எழுத்துப்பூர்வமாகச் சமர்ப்பிக்கலாம். இது உங்கள் கருத்துக்கள் மற்றும்/அல்லது அனுபவங்களைப் பற்றிய கடிதமாகவோ, கதையாகவோ அல்லது முக்கியமான ஆவணமாகவோ இருக்கலாம்.

இது பின்வருவனவற்றுக்கு உதவியாக இருக்கும்:

- உங்களையும் உங்கள் பின்னணியையும் அறிமுகப்படுத்த
- தெளிவாக, சுருக்கமாக, மற்றும் பொருத்தமானதாக இருக்க
- முக்கிய பிரச்சினைகள் என்ன என்று நீங்கள் கருதுவதைக் கோடிட்டுக் காட்ட
- தீர்வுகள் அல்லது பரிந்துரைகளை எடுத்துரைக்க
- உங்கள் அனுபவத்தைக் குழுவுடன் நேரில் பகிர்ந்து கொள்ள விரும்புவதைத் தெளிவாகக் குறிப்பிட.

நீங்கள் விரும்பும் மொழி ஆங்கிலம் அல்லாத வேறு மொழியாக இருந்தால், தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

விசாரணைக்கான வலைப்பக்கத்தில் உள்ள சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளைச் சரிபார்க்கவும். கடைசி நாளுக்குள் உங்களால் சமர்ப்பிக்க முடியாவிட்டால், நீங்கள் கால நீட்டிப்பைக் கேட்கலாம்

## நான் சமர்ப்பித்த பிறகு என்ன நடக்கும்?

சமர்ப்பிக்கப்பட்டவை வழக்கமாகக் குழுவின் இணையதளத்தில் வெளியிடப்படும், அத்துடன் அதன் அறிக்கையிலும் குறிப்பிடப்படலாம்.

உங்கள் பெயர், நீங்கள் சமர்ப்பித்தவற்றின் சில குறிப்பிட்ட பகுதிகள் அல்லது உங்கள் முழு சமர்ப்பிப்பும் இரகசியமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அதை நீங்கள் உங்கள் சமர்ப்பிப்பில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் (ஏன் என்ற காரணங்கள் உட்பட).

## மேலும் தகவல்கள்

தற்போதைய விசாரணைகள் பற்றிய தகவல்களுக்கு அல்லது சமர்ப்பிப்பதற்கு இணையதளத்தைப் பார்க்கவும். மொழிபெயர்ப்பு உதவிக்காகவோ அல்லது சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவை நீட்டிக்கக் கோருவதற்காகவோ குழுவின் ஊழியர்களைத் தொடர்புகொள்ளவும்.

www.bit.ly/ms-committee (02) 9230 3081

modern.slavery@parliament.nsw.gov.au